www.Padasalai.Net www.CBSEtips.in

V12Com

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

வகுப்பு 12

வணிகவியல்

நேரம்: 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 20×1=20

1) வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ............. என்பர்.
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2) ............. உதவியால் அதிகாரப்பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
அ) முதுகலை வணிக மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) குறியிலக்கு மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

3) பின்வருவனவற்றுள் தவறான வாக்கியத்தைக் காண்க.
அ) மூலதனச் சந்தை என்பது நீண்டகால நிதிக்கான சந்தையாகும்.
ஆ) முதல்நிலைச் சந்தை என்பது புதிய வெளியீடுகளுக்கான சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.
இ) இரண்டாம் நிலைச் சந்தையில் ஒரு முறை மட்டும் பத்திரங்கள் விற்கப்படுகிறது.
ஈ) ஏற்கனவே வெளியிட்ட பங்குகளை வணிகம் செய்வது இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.

4) பணச்சந்தையில் முக்கிய பங்காற்று அமைப்பு .............
அ) வணிக வங்கி ஆ) இந்திய ரிசர்வ் வங்கி
இ) பாரத ஸ்டேட் வங்கி ஈ) மைய வங்கி

5) கீழ்வருவனவற்றில் சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| 1. காளை | - | i) முனைம வேட்டையாளர் |
| 2. கரடி | - | ii) போராடும் ஊக வணிகர் |
| 3. கலைமான் | - | iii) எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர் |
| 4. முடவாத்து | - | iv) பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர் |

அ) 1-iii, 2-iv, 3-i, 4-ii ஆ) 1-iv, 2-iii, 3-ii, 4-i
இ) 1-iii, 2-i, 3-iv, 4-ii ஈ) 1-iv, 2-i, 3-ii, 4-iii

6) தன் வணிகர் பங்குச்சந்தையில் ஈடுபடுவது
அ) அவர்களின் வாடிக்கையாளர்களுக்காக ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக
இ) மற்ற தரகர்களுக்காக ஈ) மற்ற உறுப்பினர்களுக்காக

7) செபியின் தலைமையகம் ............. ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

8) விளம்பரம் என்பது ஒரு ............. ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அகவளங்கள் ஆ) புறவளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்

9) உடனடிச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

10) கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

11) இணையம் மூலம் பொருட்கள் (அ) சேவைகளை விற்பனை செய்யும் முறையே ............. என்கிறோம்.
அ) பசுமை சந்தையிடுதல் ஆ) மின் சந்தையிடுதல்
இ) சமூக சந்தையிடுதல் ஈ) மெட்டா சந்தையிடுதல்

12) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப்.கென்னடி
இ) ரால்ப் நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

13) ............. என்பவர் நவீன சந்தையியரின் மன்னர் ஆவார்.
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

14) வணிகத்தின் பரந்த சூழல் ஒரு ............. காரணியாகும்.
அ) கட்டுப்படுத்த முடியாத ஆ) கட்டுப்பாட்டிற்குட்பட்ட
இ) சமாளிக்க கூடியது ஈ) சமாளிக்க முடியாதது

15) புதிய பொருளாதாரக் கொள்கை ............. ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


16) சரக்கு விற்பனைச் சட்டத்தில் எது சரக்கு என்ற பொருளில் உள்ளடங்காதது?
அ) சரக்கிருப்பு ஆ) வரவேண்டிய பங்காதாயம் இ) பயிர் ஈ) தண்ணீர்
17) எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது?
அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதம்
18) தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
அ) இடர்தாங்கி ஆ) புதுமை படைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்
19) முந்தைய பங்குதாரர்களுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடும் பங்குகள் ...............
அ) ஊக்கப் பங்குகள் ஆ) சாதாரணப் பங்குகள்
இ) உரிமைப் பங்குகள் ஈ) முன்னுரிமைப் பங்குகள்
20) ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது ............... இயக்குநர்கள் இருக்க வேண்டும்.
அ) 12 ஆ) 7 இ) 3 ஈ) 2

## பகுதி - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7×2=14
**அதில் 30-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

21) பரஸ்பர நிதி என்றால் என்ன?
22) புறத்தோற்றமற்ற பத்திரக் கணக்கு என்றால் என்ன?
23) நுண்ணறிவு பரிசோதனை என்றால் என்ன?
24) சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.
25) பசுமை சந்தையிடுதல் என்றால் என்ன?
26) ஜான் F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
27) நுகர்வோர் என்பவர் யார்?
28) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்றால் என்ன?
29) 'பகராள்' சிறுகுறிப்பு வரைக.
30) ''செயல்படுவதற்கு முன் சிந்தியுங்கள்'' இந்தக் கூற்று எந்த மேலாண்மைச் செயல்பாடுடன் தொடர்புடையது?

## பகுதி - III

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7×3=21
**வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக.
32) கருவூல இரசீதின் வகைகளை விவரி.
33) மனிதவள மேலாண்மையின் பணிகளை கூறுக.
34) தேர்வுச் சோதனையின் வகைகள் யாவை?
35) காளை மற்றும் கரடி விளக்குக.
36) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
37) மாற்றுச்சீட்டின் சிறப்பியல்புகளை கூறுக.
38) காலம் கடத்தும் பழமைவாத தொழில்முனைவோர் பற்றி சுருக்கமாக எழுதுக.
39) சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
40) சந்தையிடுகையாளர் ஓர் புதுமை கண்டுபிடிப்பாளர். நீர் அதை ஏற்றுக்கொள்வீரா?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7×5=35

41) அ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி. **(அல்லது)**
ஆ) அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி.
42) அ) முதல்நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) பாரம்பரிய சந்தையிடுகை எவ்வாறு மின்சந்தையிடுகையிலிருந்து வேறுபடுகிறது. விளக்குக.
43) அ) செபியின் (SEBI) பணிகளை விவரி. **(அல்லது)**
ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக.
44) அ) நுகர்வோர் கடமைகள் யாவை? **(அல்லது)**
ஆ) எல்பிஜியின் சிறப்பு அம்சங்கள் யாவை? (ஏதேனும் 5)
45) அ) நிபந்தனை மற்றும் நம்புறுதிகளை வேறுபடுத்துக. **(அல்லது)**
ஆ) பங்குகளுக்கும், கடனீட்டுப் பத்திரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
46) அ) மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி. **(அல்லது)**
ஆ) நிறுமச் செயலரின் பணிகளை விளக்குக.
47) அ) ஏதேனும் ஐந்து அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக. **(அல்லது)**
ஆ) சந்தையின் வகைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com